**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.740/2022**
**Prosecution Witnesses :5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுரேஷ்** | Caste | : |
| Father 's Name/ Husband Name | : **ஆண்டியப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 வது எதிரி ஆஜர் இல்லை. 2 வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(20.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு. சாமியப்பன் மற்றும் ஆய்வாளர்கள் திரு.முத்து மற்றும் ஆய்வாளர் திருமதி.மாயாராஜலட்சுமி ஆகியோர்களின் கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்களில் சார்பு ஆய்வாளர் திரு.சாமியப்பன் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதாலும் மற்ற இருவர் வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதாலும் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 16.02.2021ம் தேதி காலை 8 மணியளவில் மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.சாமியப்பன் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது திருமங்கலத்தை சேர்ந்த ஜோதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப ஆஸ்டின்பட்டி காவல் நிலைய குற்ற எண். 52/2021 பிரிவு 279, 304(எ) இதச வின் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும்

முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார். ஆய்வாளர் திரு.முத்துஅவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் தனசேகர் மற்றும் பாண்டிமுனியாண்டி ஆகியோர்களின் முன்னிலையில் 10.02.2021ம் தேதி காலை 9.15 மணியளவில் சம்பவயிடம் சென்று சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும்** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 23.02.2021ம்தேதி காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு விபத்து வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார். விபத்தில் இறந்துபோன நாகராஜன் என்பவரின் பிரேதத்தை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை கிடங்கில் வைத்து 17.02.2021ம்தேதி 11.30 மணி முதல் 13.00 மணி வரை சவக்கிடங்கில் வைத்து சடலக்கூராய்வு செய்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. விபத்தில் இறந்துபோன நாகராஜன் என்பவரின் பிரேதத்தை தலைமை காவலர் கருப்பு ராஜா என்பவர் மூலமாக சடலக்கூராய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி சடலத்தை சடலக்கூராய்வு செய்த டாக்டர். திரு.அன்பழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூராய்வு அறிக்கை பெற்றுள்ளார். **சடலக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது**. பின்பு விபத்தில் சம்பந்தப்பட்ட இலகு ரக வாகனம் TN 64 R 6006 என்ற ரெனால்ட் காரை ஆய்வுசெய்த செந்தில்குமார் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். மேற்படி வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 01.03.2024ம் தேதி விபத்து சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனமானது TN 58 Z 6217 என்ற வாகனத்தை

ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பை அடுத்து வந்த திருமதி.மாயாராஜலட்சுமி என்பவர் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை.